பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

16 05 2024 **THURSDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில், அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. குடியுரிமை திருத்தச் சட்டம் உள்ளிட்ட பிஜேபி அரசு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி இருப்பதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் எதிர்காலத்திற்கான தேர்தல் என்பதால், காங்கிரஸை மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மக்களவைக்கு இதுவரை நடைபெற்ற நான்கு கட்ட தேர்தல்களில் நாற்பந்தைந்து கோடிக்கும் அதிகமானோர் ஜனநாயக கடமையை நிறைவேற்றியிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

5. **Elorda** கோப்பை குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவின் **Abishek Yadav** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

மக்களவைக்கு ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவு வரும் 20ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

மக்களவைக்கு ஏழு கட்ட தேர்தல்களில், ஏற்கனவே நான்கு கட்ட தேர்தல்கள் முடிவடைந்துள்ள நிலையில், ஐந்தாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மறுநாளுடன் நிறைவடைகிறது.

ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவு, ஆறு மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்கள் அடங்கிய 49 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

மேலும் இரண்டு கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளிலும் அரசியல் தலைவர்கள் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், உத்தரபிரதேச மாநிலம், **Jaunpur** மற்றும் **Lalganj** ஆகிய இடங்களில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டங்களில் பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று வாக்குச் சேகரித்தார்.

அப்போது பேசிய அவர், குடியுரிமை திருத்தச் சட்டம், அயோத்தி ராமர் கோவில் உள்ளிட்ட பிஜேபி அளித்திருந்த வாக்குறுதிகளை முழுவதுமாக நிறைவேற்றி இருப்பதாக தெரிவித்தார்.

சமாஜ்வாதி கட்சியும், காங்கிரசும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக செயல்படுவதாகவும், வாரிசு அரசியல் மற்றும் ஊழலில் இரு கட்சிகளும் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஜம்மு காஷ்மீரில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் அதிக சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்த திரு. நரேந்திர மோடி, அங்கு வாக்கு வங்கி அரசியலுக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது என்றார்.

இந்நிலையில், ஒடிசா மாநிலம், புவனேஷ்வரில் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டிப் பேசிய அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, தற்போது நடைபெறும் தேர்தல் நாட்டின் எதிர்காலத்திற்கான தேர்தல் என்று குறிப்பிட்டார்.

நாட்டு மக்களுக்காக உழைக்கும் காங்கிரஸ் தலைமையிலான அரசை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இளைஞர்கள், மகளிர், விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழை மக்கள் ஆகியோருக்கான உத்தரவாதங்களை, காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் அளித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி, தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் என்றும் திரு. மல்லிகார்ஜுன கார்கே நம்பிக்கை தெரிவித்தார்.

பீகார் மாநிலம், **Sitamarhi** என்ற இடத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, ராமர் கோவில் உள்ளிட்ட அனைத்து வாக்குறுதிகளையும் வலுவான அரசு அமைந்ததாலேயே நிறைவேற்ற முடிந்தது என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, கடந்த பத்தாண்டுகளில் ஏழை மக்களுக்கான எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வாக்கு வங்கி அரசியல் காரணமாகவே காங்கிரஸ் கட்சி, ராமர் கோவில் பிரச்சினையை தவறான முறையில் அணுகியதாகவும் திரு. அமித் ஷா குற்றம் சாட்டினார்.

உத்தரபிரதேசம், ரேபரேலி தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி, அரசியல் சட்டத்தை மதிக்காமல் மத்தியில் ஆளும் பிஜேபி அரசு செயல்படுவதாக குறை கூறினார்.

மாநிலத்திலும், மத்தியிலும் உள்ள பிஜேபி அரசு, மக்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிவிட்டதாகவும் திருமதி. பிரியங்கா காந்தி குறிப்பிட்டார்.

**>>>><<<<**

மக்களவைக்கு இதுவரை நடைபெற்ற நான்கு கட்ட தேர்தல்களில் 66 புள்ளி ஒன்பது ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

45 கோடியே ஒரு லட்சம் வாக்காளர்கள் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எஞ்சிய 3 கட்டங்களிலும் வாக்காளர்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

வாக்கு சதவீதத்தை அதிகரிப்பதற்காக தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டுள்ளார்.

வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் இடம்பெற்றிருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. ராஜீவ்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

>>>><<<<

மக்கள் அதிக அளவு பயன்படுத்தும் 41 மருந்துகளின் விலையை மத்திய அரசு குறைத்துள்ளது.

தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையத்தின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய மருந்துகள் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த விலை குறைப்பு உடனடியாக அமலுக்கு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருந்து நிறுவனங்கள் தங்களது விநியோகஸ்தர்களுக்கு இதுகுறித்து உரிய அறிவுரைகளை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரை நோய், இதயம் மற்றும் நுரையீரல் சார்ந்த நோய் சிகிச்சைக்கான மருந்துகள் இதில் அடங்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

உத்ராகண்ட் மாநிலம், **Char Dham** யாத்திரை செல்லும் பயணிகள் இனி முன்பதிவு செய்த பின்னரே யாத்திரையை மேற்கொள்ள முடியும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

சோதனைச் சாவடிகளில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் போது, பதிவு செய்துள்ள பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்று உத்ராகண்ட் மாநில தலைமைச் செயலாளர் **Radha Raturi** தெரிவித்துள்ளார்.

பிற மாநிலங்களிலிருந்து வரும் யாத்ரிகர்களுக்கு முன்பதிவு குறித்து அறிவுறுத்துமாறு அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக **Radha Raturi** கூறியுள்ளார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் உள்ள வைஷ்ணவ் தேவி கோவிலுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் சிறப்பு தரிசனம் செய்ய ஏதுவாக, அடுத்த மாதம் ஹெலிகாப்டர் சேவை தொடங்கப்படும் என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.
இரண்டு கட்டண முறைகளின் கீழ், இந்த சேவை தொடங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

ஒரே நாளில் தரிசனம் முடித்து திரும்பும் யாத்திரிகரிகளுக்கு 35 ஆயிரம் ரூபாயும், அடுத்த நாள் திரும்பும் யாத்திரிகர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் திருமதி. **Swati Maliwal** தாக்கப்பட்ட சம்பவம் குறித்து, நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்று தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் தனிச்செயலாளர் திரு. **Bibhav Kumar-**க்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவத்தை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மகளிர் ஆணையம், திரு. **Bibhav Kumar** நாளை மகளிர் ஆணையத்தில் ஆஜராக உத்தரவிட்டுள்ளது.

**>>>><<<<**

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் தடை செய்யப்பட்ட ஜெய்ஸ்-இ-முஹமது தீவிரவாத அமைப்பின் 7 அசையா சொத்துக்களை முடக்கி, தேசிய புலனாய்வு முகமையான **NIA** நடவடிக்கை எடுத்துள்ளது.

காஷ்மீரின் புல்வாமா மாவட்டம், **Kisarigam** எனும் இடத்தில் உள்ள **Sartaj Ahmed** என்பவருக்கு சொந்தமான அந்த சொத்துக்கள் முடக்கப்பட்டிருப்பதாக **NIA** தெரிவித்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு **Sartaj Ahmed** கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**>>>><<<<**

சீனா – ரஷ்யா இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையிலான கூட்டறிக்கையில், சீன அதிபர் திரு. ஸீ ஜின்பிங்-கும், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினும் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன் மூலம் இருநாடுக்கும் இடையே புதிய உத்வேகம் ஏற்பட்டிருப்பதாக, **Beijing-**கில் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

முன்னதாக, இரண்டு நாள் பயணமாக **Beijing** சென்ற ரஷ்ய அதிபருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

**>>>><<<<**

தெற்கு அந்தமான் கடல் பகுதி மற்றும் தென்கிழக்கு வங்கக்கடலை ஒட்டிய பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை வரும் ஞாயிற்றுக்கிழமை வாக்கில் தொடங்க வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மாநிலங்களிலும் புதுச்சேரி, காரைக்கால், மாஹே பகுதிகளிலும் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில், கனமழை எச்சரிக்கை காரணமாக, ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று நாட்டுப் படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கார்த்திகேயன் 30 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

**Elorda** கோப்பை குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவின் **Abishek Yadav** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.
கஜகஸ்தானின் **Astana-**வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 67 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் **Rakhat Seitzhan-**ஐ வென்றார்.

**>>>><<<<**

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.
இவர் டென்மார்க்கின் **Mads Christophersen**-ஐ 21-14, 22-20 என்ற செட்கணக்கில் வென்றார்.
ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

ஜப்பானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Rutuja Bhosale** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-0 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Aoi Ito-**வை வென்றார்.

**>>>><<<<**

**Cappadocia** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனிக்கா பத்ரா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.
துருக்கியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 3-2 என்ற ஆட்டக்கணக்கில் தைவானின் **Wang Yi Ju-**வை வென்றார்.

**>>>>END<<<<**